# ஈழத்துச்சிறுவர் பாடல்கள் போதனைகளும் நெறிமுறைகளும்

***வினோதினிஅறிவழகன்***
விரிவுரையாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

## ஆய்வுச்சுருக்கம்

*ஈழத்துத் தமிழ் இலக்கியமானது, இன்று பல்வேறு தளங்களில் வளர்ச்சி கண்ட நிலையில் சிறுவர்களுக்கான இலக்கியம் என்பது முக்கியமான ஒன்றாகத் திகழ்கின்றது. இங்கு சிறுவர் என்ற பதமானது குழந்தை-பாலர் -பிள்ளை-முன்குமரர் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இவற்றின் ஒட்டுமொத்த சொற்பதமே “சிறுவர்” என்பதாகும். அவ்வகையில் சிறுவர் இலக்கியம் என்பது சிறுவருக்கே உரிய, சிறுவர் பற்றிய இலக்கியம் எனலாம். இவ்விலக்கியங்களுள் சிறுவர் பாடல்கள், கதைகள், நாட கங்கள், மொழிபெயர்ப்புகள், சஞ்சிகைகள் என்பன உள்ளடக்கப்படுகின்றன. இதில் சிறுவர் பாடல்களின் வெளிப்பாடு-பொருள் தனித்துவமானவை என்பது பலரின் கருத்து. அதன் அடிப்படையில் நோக்குகின்றபோது சிறுவர் பாடல்கள் சிறுவர்களுக்கு ஏற்றாற்போல அமையாது உள்ளன. அந்தவகையிலே, சிறுவர் பாடல்களில் இடம் பெறுகின்ற போதனைகள், நெறிமுறைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***திறவுச்சொற்கள்:*** *சிறுவர், சிறுவர் பாடல்கள், போதனைகள், நெறிமுறைகள், வெளிப்பாடு, தனித்துவம்.*

## அறிமுகம்

தமிழ் இலக்கியப் பாரம்பரியநிலை நின்று நோக்கும்போது சிறுவர் இலக்கிய முயற்சிகள் நீண்டகால வரலாறு கொண்டன. இதனை,

1. நாட்டார் இலக்கியமரபு சார்ந்தன
2. செந்நெறி இலக்கியமரபு சார்ந்தன

என இருவகையாகக் காணலாம். நாடார் இலக்கியமரபு சார்ந்தவற்றுள் கால வெள்ளத்துள் கலந்தவை போக எஞ்சியவை சொற்பமே. வாய்மொழியாகப் பாடப்பட்டு வந்த சிறுவர் பாடல்களில் சில காலப்போக்கில் தொகுக்கப்பட்டு நூலுருப் பெற்றுள்ளன. இச்சிறுவர் இலக்கியங்களை சிறுவர் பாடல், சிறுவர் நெடுங்கதை, சிறுவர் நாடகங்கள், மொழி பெயர்ப்புகள், சிறுவர் சஞ்சிகைகள், சிறுவர் அறிவுசார்ந்த நூல்கள் என்ற வகைப்பாட்டிற்குள் உள்ளடக்கலாம்.

## சிறுவர் பாடல்களின் தோற்றம்

ஈழத்துச் சிறுவர் இலக்கியத்தில், சிறுவர் பாடல்களின் தொடர்ச்சியானது வைத் தியநாததேசிகருடனேயே ஆரம்பிக்கின்றது. அதனைத் தொடர்ந்து சிறுவர் பாடல்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஈழத்து முதலாவது சிறுவர் பாடல் தொகுப்பானது "பிள்ளைப்பாட்டு" என்ற பெயரில் க.ச.அருணந்தி என்பவரால் 1935ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஈழத்துச் சிறுவர் இலக்கிய வரலாற்றில் முக்கிய இடத்தினைப் பெறுகின்ற ஒரு தொகுப்பாக இது திகழ்கின்றது. இத்தொகுப்பு மூலமாக சோமசுந்தரப்புலவர், மா.பீதாம்பரம், இ.பஞ்சாட்சரஐயர், ஜே.எஸ். ஆழ்வார்பிள்ளை, க. வேந்தனார், தில்லைச்சிவன் ஆகியோர் அறிமுகமாயினர்.

மேற்கூறியவர்களைத் தொடர்ந்து வெற்றிவேல் விநாயக மூர்த்தி, பதுளை சாரணாகையூம், கவிமணி எம். சி. எம்.சுபைர், வ. இராசையா, கல்வயல் வே. குமாரசு வாமி, ச. அருளானந்தம், திமிலைத் துமிலன். திமிலைமகாலிங்கம், வரதா சண்முகநாதன், த. துரைசிங்கம், ராணிசீதரன், வாகரைவாணன் ஆகியோர் சிறுவர் பாடல்கள் இயற்றுவதில் ஆர்வம் காட்டி உள்ளனர். சின்னச் சிட்டுக்கள், ஆடி மகிழ்வோம், தாய், சிறுவர் செந்தமிழ், மாலைக்கு மாலை, ஈழத்துக் குழந்தைப் பாடல்கள், கவிதைப் பூம்பொழில், பாப்பாப் பாடல்கள் எனப் பலவகையான சிறுவர் பாடல் நூல்கள் வெளிவந்துள்ளன. காலப்போக்கில் சமூக மயமாக்கலானது சிறுவர் பாடல்களின் பாடு பொருளில் வெளிப்பாடுகளில் ஆங்காங்கே மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

## போதனைகளும் நெறிமுறைகளும்

சிறுவர் பாடல்களின் உள்ளடக்கமானது தனித்துவமானவையாகவே திகழ்கின்றன. காலப்போக்கில் உள்ளடக்கங்களில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் வழமையாகக் கையாளப்பட்ட பொருள்மரபு நிலவு, கிளி, பூனை, பூக்கள், இறைவன் என்ற அம்சங்களின் ஊடாகக் குதூகலம், உற்சாகம், புலக்காட்சி, கல்விச் சிந்தனை, நற்சிந்தனை என்பனவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன.

எதுஎவ்வாறெனினும், ஈழத்து சிறுவர் பாடல்களில் போதனைகளும் நெறி முறைகளும் 1970களின் நடுக்கூறு வரை அதிகமாகவும் அதன் பின்னர் வெளிவந்த பாடல்களிலும் தொனிக்கின்றமை கண்கூடு.

சிறுவயது முதலே சிறுவர்களை நல்வழிப்படுத்தல் என்பது இன்றைய சமூகத்தில் மட்டுமன்றி காலாகாலமாகத் தொடர்ந்து வருகின்றது. இந்நல்வழிப்படுத்தலானது வாய் வார்த்தைகளாக மட்டுமன்றி இலக்கியங்களைக் களமாகக்கொண்டும் புகட்டப்படுகின்றது. இதில் சிறுவர் பாடல்கள் சிறப்பான இடத்தினைப் பெறுகின்றன. குறிப்பாகச் சிறுவர் பாடல்களின் மூலம் நன்னடத்தைகளைக் கூற வந்த ஆசிரியர்கள் பொய் -களவு கூடாது, பிறரைத் துன்புறுத்தல் ஆகாது, பிறரை மதித்தல் வேண்டும் போன்ற இன்னோரன்ன விடயங்களை முன்வைத்துச் செல்கின்றனர்.

**"நண்டின் காலைஒடிக்காதே**
**நாயைக் கல்லாலடிக்காதே**
**கிளியைக் கூண்டில் அடைக்காதே**
**கேடுனை வந்து சூழ்ந்திடுமே"**

**(மாலைக்குமாலை ப.75)**

என்ற பாடலடிகள் நல் விடயங்களைக் கூற முனைந்தாலும் சிறுவர்களை நோக்கி இதனைச் செய்யாதே, தொடாதே, அதனை அடைக்காதே என்று எதிர்மறையாகக் குறிப்பிடும்போது அதனை அவர்கள்

செய்து பார்க்கும்படியான சிந்தனை கூடும். மாறாக அவர்களுக்கு ஏற்றாற்போல வயது, அறிவுத்திறன், உளவியல் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு பொருத்தப்பாட்டுடன் முன்வைக்க வேண்டும் என்பது சிறுவர் இலக்கியம் படைப்போர் கட்டாயம் கவனத்தில்கொள்ள வேண்டியது ஆகும்.

அத்துடன் நன்நெறியில் நடத்தல் மட்டுமன்றி, துணிவு சிறுவர்களுக்கு முக்கியமானது. எந்தச் செயலையும் துணிவுடன் செய்தல், முக்கியமாக ஆண்பிள்ளைகளுக்குத் துணிவு வேண்டும் என்பது இப்பாடல்களின் அடிநாதமாக ஒலிக்கின்றது.

***"தம்பி ஒன்று சொல்லுகின்றேன்***
***சாதி சமய ஏற்றத்தாழ்வுச்***
***சாக் கடையில் விழாதே***
***துணிவுகொண்டு உன் பணியைத்***
***தொடங்கி உலகை மாற்றுவாய்"***

***(பந்தடிப்போம் ப.15)***

எனக் "குருவியின் தலைமீது பனங்காயை வைப்பது போல" சிறுவர்கள் மீது சுமைகளை ஏற்றுகின்றார்கள்.

அதேவேளை சிறுவர்களுக்குக் கூறும் நற்கருத்துக்களை கருத்தாழ மிக்க சொற்களைக்கொண்டு எடுத்துக் கூறுவது சிறுவர் பாடல் ஆசிரியர்களின் கருத்துத் திணிப்பினையே காட்டுகின்றது. ரூசோ என்றஆய்வாளர், சிறுவர் இலக்கியமானது

***"வளர்ந்தோரின் தலையீடு அற்றநிலையில் சிறுவர்களின் வளர்ச்சிக்குத் துணைநிற்றல், தாமாகவே முயன்றுகற்றுக் கொள்வதற்கு உதவுதல், இயற்கையோடு இசைந்து வாழ்வதற்கு வளஞ்செய்தல்"***

என்றவாறு அமைதல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். இக்கூற்றின்படி சிறுவர் பாடல்களை நோக்கின் எதிர்மறைப் போக்கிலேயே இயற்றப்பட்டுள்ளமை, இயற்றப்படுகின்றமை தெளிவு.சிறுவர்கள், பாடல்களின் கடினமான சொற்பிரயோகத்தினால் இன்னொருவரின் தேவையை நாடிநிற்க வேண்டியநிலைக்கு ஆளாகின்றனர். எடுத்துக்காட்டாக பதர், துன்னிய, புலான், எள்ளாதே, நிசி. தறுகண், திண்ணிய, செயித்தியம் போன்ற சொற்களைக் குறிப்பிடலாம்.

***"பொல்லாத குடியொடு புலான்மிசையுந் தொழில்விட்டு***
***நல்லார்கள் தொடர்புடனே***
***நாளுமவனுயர்கின்றான்"***

***(சிறுவர் செந்தமிழ் ப.46)***

என்ற பாடலடியும்,

***"செயித்தியம் பலப்பல செறிந்திடப் பெற்றாய்***
***சிறிசங்கபோதியின் சிறப்பையும் உற்றாய்"***

***(பிள்ளைப் பாட்டு ப. 81)***

என்ற பாடலடியும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

ஒற்றுமையுடன் வாழ்வதும் அவ்வாறு வாழ்தல் பல்லின சமூகத்தை ஒன்றிணைக்கும் என்பதும் நம் முன்னோர்கள் கருத்து. இதனை சிறுவர்களுக்கு எடுத்துரைக்க விளையாட்டு, கதைகள், விழாக்கள் கொண்டாடுதல், ஒன்றிணைந்து செயல்களில் ஈடுபடுதல் என்பவற்றின் ஊடாக சிறுவர்களைச் செயற்படுத்தி நல்வழிப்படுத்த முனைந்துள்ளனர்.

***"ஓர் ஊரில் ஒருதாய்க்கு மைந்தரிரு பேர்கள்***
***பாருங்கள் இரண்டுகையால் வேலைகள் செய்கின்றோம்***
***பகைத் தொருகை தணித்திருந்தால்***
***வேலை செய்யவருமோ?"***

***(பிள்ளைப்பாட்டு ப.24)***

எனப் பெரியோருக்குக் கூறுவதுபோல எடுத்துக் கூறி,

**“தனியேசிறிசு கூடினால்**
**தானேசக்தி கூடுமாம்**
**மனிதாவாவா கூடியே**
**மண்ணை விண்ணாய்ச் செய்குவாய்”**

***(ஈழத்துக் குழந்தைப் பாடல்கள் ப.16)***

என ஒட்டுமொத்த மனித இனத்தின் முன்னேற்றமும் சிறுவர்கள் கையிலே தானுள்ளது என்ற ஒரு எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றனர். இவை மட்டுமன்றி நாள்தோறும் கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களாகப் பெரியோர் சொன்ன சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கைக்கொண்டால் நூறாண்டு வாழலாம் என்பதனைச் சிறுவர்களுக்கான நல்ல விடயங்களாக முன்வைத்தாலும் ஒரு வகையில் நெறிமுறைகளைக் கட்டளையாக இடும் தோரணை வெளிப்பட்டு நிற்கின்றது.

**“சுத்தமாங்காற்றைச் சுவாசி-மாலைச்**
**சுடர் வெயில் பட விளையாட்டப்பியாசி**
**நித்தமுந் தூய்மையை நேசி - கூடா**
**நீரை மறந்தும் குடியாதே கூசி”**

***(சிறுவர் செந்தமிழ் ப.72)***

என்ற பாடலடிகள் சிறந்த எடுத்துக் காட்டாகும். பகுத்துண்டு வாழ்தல் மூலம் பல்லுயிர்கள் ஓம்பப்படும் என்பது காலாகாலமாக கூறப்படுவதாகும். இதனைச் செல்வம் நிறையப் பெற்றோர் கடைப்பிடிக்க வேண்டியதாகவும் தம்மிடம் இருக்கும் பொருளில் சிறிதளவாகிலும் பிறருக்கு வழங்குதல் அவர்களுக்குச் சிறப்பளிப்பதாகவும் இலக்கியங்கள் பறைசாற்றும். இதனை சிறுவர்களுக்கு முன்வைக்கின்றபோது,

**“உள்ள பொருளில் பிறர்க்கும்**
**உதவிசெய்ய வேண்டும்**
**கள்ளம் கபடம் செய்தால்**
**கடவுள் பொறுக்கமாட்டார்”**

***(கவிதைப் பூம்பொழில் ப.107)***

எனப் போதனை செய்கின்றனர். சிறுவர்கள் நல்லவற்றை கடைப்பிடிக்க வேண்டுமேயானால் அன்பாகக் கூறுகின்ற போது ஏற்றுக்கொள்கின்ற திறம் அவர்களிடம் இருக்கும். மாறாக நல்லன செய்யாவிட்டால் கடவுள் தண்டிப்பார் என அவர்களைப் பயமுறுத்தி ஏற்றுக்கொள்ள வைக்கின்றபோக்குக் காணப்படுகின்றது.

**“வேலையில்லை வேலையில்லை**
**என்ற வெற்றுக் கூச்சலில்**
**வேலையில்லை வீட்டைவிட்டு**
**வேலை செய்ய முற்படு!”**

***(தங்கக் கடையல் ப.72)***

என இன்ப வெள்ளத்தில் திளைக்கும் பிஞ்சு உள்ளங்களை வயதிற்கு மீறிய எண்ணப்பாட்டில் திளைக்கவைத்து விடுகின்றனர். சிறுவர்கள் குதூகலமாக சுற்றித் திரியும் பருவத்தில் சிறப்பான தொழிலைச் செய்வதன்மூலம் சிறந்த வாழ்க்கையை அனுபவிக்கலாம் என்று கூறுவது, வயது முதிர்ச்சிக்கான போதனையாகவும் நெறிமுறையாகவும் சிறுவர் பாடல்கள் விளங்குவதனை வெளிக்காட்டுகின்றன.

## நிறைவுரை

ஈழத்துச் சிறுவர் பாடல்களை விரிவாகவும் நோக்குகின்றபோது, அப்பாடல்களில் கூறப்பட்டுள்ள சமூக விழுமியக் கருத்துக்கள், சிறுவர்களின் வயதிற்கும் அறிவுக்கும் ஏற்றாற்போல இயற்றப்படவில்லை. மாறாக அவை அதீத போதனைப் பண்புகளாகவே காணப்படுகின்றன. இனிவரும் காலங்களில் ஈழத்துச் சிறுவர் பாடல்கள் தொடர்பாக மேலும் கவனம் செலுத்தவேண்டிய தேவை உள்ளது. சோகம், கோபம், கவலை, துன்பம், தொல்லை சார்ந்த மன அழுத்தம் முதலிய மன எழுச்சிகளுக்கும் உணர்வுகளுக்கும் உட்படாத சிறுவர் பருவத்தினைக் கருத்திற்கொண்டு, சிறுவர் இலக்கியப் படைப்பாளிகள், சிறுவர்கள் மீதான கருத்துத் திணிப்புக்களை ஏற்படுத்தாது,

கடின சொற்களின் பிரயோகங்களைத் தவிர்த்து, அதீதபோதனைப் பண்புகளைத் தவிர்த்து ஈழத்து சிறுவர் பாடல்களை வலிமைபெறச் செய்ய வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**

1. சாரணாகையூம், (1983), சிறுவர் பாட்டு, கண்டி: தமிழ் மன்றம்.
2. செந்திநாதன். கனக. இரசிகமணி, (1979), ஈழத்துக் குழந்தைப் பாடல்கள் தொகுப்பு
3. நவாலியூர் சோம சுந்தரப்புலவர், க.,1955), சிறுவர் செந்தமிழ், கொழும்பு: அப்போதிக்கரிசு வணிகநிலைய அச்சகம்.
4. யாழ்ப்பாணன், (1948), மாலைக்குமாலை, பருத்தித்துறை: வடலங்கா புத்தகசாலை.
5. வீரகத்தி, க., (1971), தங்கக் கடையல், கொழும்பு: எம்.டி.குணசேனா அன்ட் கம்பெனிலிமிடெட்
6. வேந்தனார்,க., (2010 இரண்டாம் பதிப்பு), கவிதைப் பூம்பொழில், சென்னை: மித்ரவெளியீடு.
7. யோகராசா, செ., (2007), ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
8. மனோன்மணிசண்முகதாஸ், (2012), இலங்கைத் தமிழியல் சில பதிவுகள், சென்னை: குமரன் புத்தக இல்லம்.